©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 10.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 176A]
சென்னை, வியாழக்கிழமை, ஜூலை 16, 2009
ஆனி 32, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

#### பொருளடக்கம்

பக்கங்கள்

சட்டமுன்வடிவுகள்:

| | |
|---|---|
| எண் 19/2009—தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டம் .. | 2–3 |
| எண் 20/2009—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் .. | 5–6 |
| எண் 21/2009—தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் .. .. .. | 7–16 |
| எண் 22/2009—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டம் .. | 17–18 |
| எண் 23/2009—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. | 19–24 |
| எண் 24/2009—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. .. | 25–26 |

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்ககாரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2009**

***1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.***

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**167 மற்றும் 168–ஆம் பிரிவுகள் விட்டுவிடப்படுதல்.**

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 167 மற்றும் 168–ஆம் பிரிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும். **தமிழ்நாடு சட்டம் 21/1994.**

169–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 169ஆம் பிரிவில்;

(1) தலைப்பில் வருகின்ற ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) *(a)* எனும் கூறில், ''167ஆம் பிரிவின்கீழ் உள்ளூர்த் தீர்வை, 168ஆம் பிரிவின்கீழ் உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) *(b)* எனும் கூறில், ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) *(c)* எனும் கூறில், ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

176–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 176ஆம் பிரிவில் உள்ள, 168 அல்லது 171ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ''மேல்வரி அல்லது வரி, கிராம ஊராட்சியால் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் வழங்கப்படுதல்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக 171ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ''மேல்வரி அல்லது வரி கிராம ஊராட்சியால் வழங்கப்படுதல்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

186–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 186–ஆம் பிரிவில் (b) எனும் கூறில், ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

188–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 188ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், (d)–எனும் கூறில் ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

2009—2010—ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பின்வருமாறு அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது:

நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வரும் தற்போதைய நிலவரி வசூல் முறையில், நிலவரியோடு சேர்த்து உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி, தண்ணீர் தீர்வை போன்றவையும் வசூலிக்கப்பட்டு வருகின்றன. இந்த வரிகள் அனைத்தும் சேர்ந்து விவசாயிகளுக்கு நில உடைமைக்குச் சான்றாக விளங்கத்தக்க வகையில் 'நிலவரி' என்ற பெயரால் இனி பெயரளவிற்கு மட்டுமே வசூலிக்கப்படும். சிக்கலான தற்போதைய முறையை எளிமைப்படுத்தி, வரும் பசலி ஆண்டிலிருந்து, புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டு வரும் 15 ரூபாய் தொகையை, இனி ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டு வரும் ரூபாய் 50 என்பதை, இனி ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் என்றும் குறைத்து வசூலிக்கப்படும். உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி என்று இனி எந்த வரியும், விவசாயிகளின் தலையில் சுமத்தப்படமாட்டாது. இதனால், 50 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவர்.

2. மேற்கூறிய அறிவிப்பை செயல்படுத்துவதற்காக உள்ளூர்த் தீர்வை மற்றும் உள்ளூர்த் தீர்வை மேல்வரி ஆகியவைகளை நீக்கம் செய்ய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994)—ஐ தக்கவாறு திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

3. இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்ககாரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2009**

***1976ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.** **2.** 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில் ''முப்பத்து மூன்று ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''முப்பத்து மூன்று ஆண்டுகள் எட்டு திங்களுக்கு'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். **4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**நோக்க—காரண விளக்கவுரை.**

பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976) 4ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி முதல் நிலையாக இரண்டு ஆண்டு கால அளவுக்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அத் தனி அலுவலர்களின் நியமனக் கால அளவானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்து அது, 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9ஆம் நாளன்று முடிவடைவதாக இருக்கிறது.

2. அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்கான தேர்தல்கள் முறையே, 2007ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7ஆம் நாளன்றும், 2007ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றுள்ளனவோ அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து, அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. சட்டமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கலந்தாய்வு செய்த பின்னர் புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. எனவே, மேற்சொன்ன பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இன்னமும் அதிக காலம் ஆகும். எனவே அரசானது, மேற்சொன்ன பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர்களின் நியமனக் கால அளவை 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு திங்கள் கால அளவு ஒன்றுக்கு நீட்டிப்பது எனவும், மேற்சொன்ன சட்டத்தை அந்நோக்கத்திற்காகத் தக்கவாறு திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது.

4. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கோ.சி. மணி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2009**

***தமிழ்நாடு மாநிலத்தில் பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துவதற்கும், அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.

1. (1) இந்தச் சட்டம், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,— பொருள் வரையறைகள்.

(a) ‘‘கல்வியாண்டு’’ என்றால் ஜூன் முதல் நாளன்று தொடங்கி மே கடைசி நாளன்று முடிகிற ஓர் ஆண்டு எனப் பொருள் படும்.

(b) ‘‘உதவி பெறும் பள்ளி’’ என்றால், மாநில நிதியங்களிலிருந்து உதவியாக பணத்தொகை எதனையும் பெறுகிற பள்ளி ஒன்று என்று பொருள்படும்;

(c) ‘‘குழு’’ என்றால் 5ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்;

(d) ‘‘மாவட்டக்குழு’’ என்றால் 11ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்.

(e) ‘‘கட்டணம்’’ என்றால், எந்த வகுப்பிற்கும் அல்லது படிப்புப் பிரிவுக்கும் மாணவர்களைச் சேர்ப்பதற்காக, பள்ளியினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், அவ்வாறு வசூலிக்கப்படும் தொகை எதுவும் எனப் பொருள்படும்;

(f) ‘‘அரசு’’ என்பது மாநில அரசு எனப் பொருள்படும்;

(g) ‘‘அரசுப் பள்ளி’’ என்றால், அரசாலோ அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனாலுமோ நடத்தப்படும் ஒரு பள்ளி எனப் பொருள்படும்;

(h) ‘‘உள்ளாட்சி அதிகார அமைப்பு’’ என்றால்—

(i) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி மாநகராட்சிகள் அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதனின்படியும் அமைத்துருவாக்கப்படக்கூடிய பிற மாநகராட்சி எதுவும் எனப் பொருள்படும்; அல்லது

தமிழ்நாடு சட்டம் V/1920 (ii) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம்; அல்லது

தமிழ்நாடு சட்டம் 21/1994 (iii) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சி;

(i) ‘‘மேலாண்மை’’ என்றால் மேலாண்மைக் குழுவை அல்லது பள்ளி விவகாரங்களை மேலாண்மை செய்வதற்கு அல்லது நிர்வாகம் செய்வதற்கு அதிகாரங்கள் உற்றமைந்திருந்து, எந்தப் பெயராலும் அழைக்கப்படும் நபர் எவரையும், நபர்களின் அமைப்பையும் குழுவினையும், பிற ஆளுகை செய்யும் குழு எதனையும் உள்ளடக்கும்:

**வரம்புரை :**—அற மற்ற சமயநிறுவனங்கள் மற்றும் நிலைக் கொடைகள் மற்றும் வகுப்புகள் தொடர்பாக அப்போதைக்கு நடைமுறையிலிருக்கிற சட்டம் எதனாலும் அமைத்துருவாக்கப்பட்டு அல்லது அமர்த்தப்பட்டு எந்தப் பெயராலும் அழைக்கப்படும் வக்ஃப் வாரியத்தின் பொறுப்புக்கட்டளையர் குழு அல்லது ஆளுகை அமைப்பானது, இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு மேலாண்மை அமைப்பாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(j) ''தனியார் பள்ளி'' என்பது, நபர் எவராலும் அல்லது நபர்களின் குழு எதனாலும் நிறுவப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வருகிற அல்லது பேணி வரப்படுகிற மற்றும் அப்போதைக்கு நடைமுறையிலிருக்கிற சட்டம் அல்லது ஒழுங்குமுறைச் சட்டத்தொகுப்பு எதனின் படியும் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பால் ஏற்பிசைவு அளிக்கப்பட்ட அல்லது ஒப்பேற்பு அளிக்கப்பட்ட தொடக்க முன்நிலைப்பள்ளி, தொடக்க நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி அல்லது மேல்நிலைப்பள்ளி எதுவும் என்று பொருள்படும், ஆனால் அது,—

(i) உதவிபெறும் பள்ளி ஒன்றை;

(ii) மைய அரசால் அல்லது மாநில அரசால் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனாலும் நிறுவப்பட்டு, செயலாட்சி செய்யப்பட்டு வருகிற அல்லது பேணிவரப்படுகிற பள்ளி ஒன்றை;

(iii) பிறவாறான கற்பித்தல், சமயக் கல்வியை மட்டுமே அளிக்கிற, அதற்கு வகை செய்கிற அல்லது கற்பிக்கிற பள்ளி ஒன்றை, உள்ளடக்காது.

**விளக்கம்**:— இந்தக்கூறின் நோக்கத்திற்காக,—

(1) ''ஒழுங்கு முறை விதித் தொகுப்பு'' என்றால், ஏற்பளிக்கப்பட்ட மழலையர் பள்ளி மற்றும் தொடக்க முன்நிலைப் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதித் தொகுப்பு, மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பு மற்றும் ஆங்கிலோ — இந்தியப் ஒழுங்குமுறை விதித் தொகுப்பு என்று பொருள்படும்.

(2) (i) தொடக்க முன்நிலைப் பள்ளியானது முதல் நிலை மழலையர் வகுப்பு (pre KG) முதல் மேல்நிலை மழலையர் வகுப்பு (U K G) வரையில் வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்;

(ii) தொடக்கப்பள்ளியானது கீழ்நிலை மழலையர் வகுப்பு (LKG) முதல் V வரையிலான வகுப்புகளை அல்லது I முதல் V வரையிலான வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்;

(iii) நடுநிலைப் பள்ளியானது கீழ்நிலை மழலையர் வகுப்பு (LKG) முதல் VIII, I முதல் VIII வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் VIII வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்;

(iv) உயர்நிலை பள்ளியானது கீழ்நிலை மழலையர் வகுப்பு முதல் X வகுப்புகளை அல்லது VI முதல் X வகுப்புகளை அல்லது IX மற்றும் X வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்;

(v) மேல்நிலைப்பள்ளி என்பது கீழ்நிலை மழலையர் வகுப்பு முதல் XII வரையிலான வகுப்புகளை அல்லது I முதல் XII வகுப்புகளை அல்லது VI முதல் XII வகுப்புகளை அல்லது XI, XII ஆகிய வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்.

(3) மாநில நிதியங்களிலிருந்து உதவி என்ற வகையில் பணம் எதுவும் செலுத்தப்படாது வகுப்புகள் அல்லது படிப்புப்பிரிவுகள் எவற்றையும் நடத்துகிற உதவி பெறும் பள்ளிகள், அத்தகைய வகுப்புகள் அல்லது படிப்புப்பிரிவுகள் எந்த அளவுக்கு தொடர்புடையனவாக இருக்கின்றனவோ அந்த அளவிற்கு, தனியார் பள்ளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

**கூடுதல் கட்டணத்தை வசூலிப்பதற்குத் தடை.**

3. (1) அரசுப்பள்ளி அல்லது உதவிபெறும் பள்ளி எதுவும், அந்தப்பள்ளியில் வகுப்பு அல்லது படிப்புப் பிரிவு எதற்கும், மாணவர்களைச் சேர்ப்பதற்காக அரசால் நிருணயிக்கப்பட்ட கட்டணத்திற்குக் கூடுதலாகக் கட்டணம் எதையும் வசூலித்தல் ஆகாது.

(2) இந்தச் சட்டத்தின்படி குழுவால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்திற்குக் கூடுதலாக கட்டணம் எதுவும், ஒரு தனியார் பள்ளியில் வகுப்பு அல்லது பாடப்பிரிவு எதற்கும் மாணவர்களைச் சேர்ப்பதற்காகப் பின்வரும் நபர் எவராலும், வசூலிக்கப்படுதல் ஆகாது—

(a) அத்தகைய தனியார் பள்ளியின் மேலாண்மையில் பொறுப்பிலிருக்கிற அல்லது அதற்குப் பொறுப்புடையவராயிருக்கிற நபர் எவராலும்;

(b) தனக்காகவோ அல்லது அந்தத் தனியார் பள்ளிக்காகவோ அல்லது அத்தகைய தனியார் பள்ளியின் மேலாண்மைக்காகவோபிற நபர் எவராலும்.

**(3)** இடைநிலைக் கல்வி மையக் குழுவுடன் இணைக்கப்பட்ட பள்ளி எதனாலும் வசூலிக்கப்படும் கட்டணம் எதுவும், அந்த பள்ளியால் வழங்கப்படும் வசதிகளுக்குத் தகுந்தாற்போல் இருத்தல் வேண்டும்.

அரசால் கட்டணம் நிருணயிக்கப் படுதல்.

**4.** அரசானது, அரசுப்பள்ளிகளிலும் உதவி பெறும் பள்ளிகளிலும் உள்ள வகுப்பு எதற்கும் அல்லது படிப்புப் பிரிவு எதற்கும் மாணவர்களைச் சேர்ப்பதற்கான கட்டணத்தை நிர்ணயித்தல் வேண்டும்.

குழுவினை அமைத்துரு வாக்குதல்.

**5.** **(1)** அரசானது, தனியார் பள்ளிகளில் வகுப்பு எதிலும் அல்லது படிப்புப்பிரிவு எதிலும் சேர்ப்பதற்கான கட்டணத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகக் குழு ஒன்றை அமைத்து உருவாக்குதல் வேண்டும்.

**(2)** குழுவானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும், அதாவது:—

| | |
|---|---|
| (a) அரசால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி | — தலைமையாளர்; |
| (b) பள்ளிக் கல்வி இயக்குநர் | — பதவி வழி உறுப்பினர்; |
| (c) மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் | — பதவி வழி உறுப்பினர்; |
| (d) தொடக்கக்கல்வி இயக்குநர் | — பதவி வழி உறுப்பினர்; |
| (e) இணைத் தலைமை பொறியாளர் (கட்டடங்கள்) பொதுப்பணித் துறை | — பதவி வழி உறுப்பினர்; |
| (f) அரசு கூடுதல் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை | — பதவி வழி உறுப்பினர்— செயலர்; |

**(3)** தலைமையாளரின் பதவிக்காலம் அவர் அவ்வாறு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து **3** ஆண்டு கால அளவாக இருக்கும். மேலும் எந்தக் காரணத்திற்காகவும், அதற்கு முன்னதாக காலி இடம் எதுவும் ஏற்படுகின்ற நேர்வில், எஞ்சிய கால அளவிற்கு அந்தக் காலி இடம் நிரப்பப்படுதல் வேண்டும்.

**(4)** தலைமையாளர் முதல் நிலை குழுவிற்குப் பொருந்தக்கூடிய அதே அமர்வுக் கட்டணத்தையும் பயணப்படியையும் பெறுவதற்கு தகுதியுடையவராவார்.

**(5)** குழுவை அமைத்துருவாக்கியதில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமே குழுவின் செயல்பாடு அல்லது நடவடிக்கையானது செல்லாததாக இருத்தல் கூடாது.

**(6)** தலைமையாளர் குழுவின் கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும்.

கட்டணத்தை நிர்ணயிப் பதற்கான கூறுகள்.

**6.** **(1)** குழுவானது பின்வரும் கூறுகளைக் கருத்தில் கொண்டு தனியார் பள்ளியொன்றால் விதிக்கப்பட வேண்டிய கட்டணத்தை நிர்ணயித்தல் வேண்டும்:—

(a) தனியார் பள்ளியின் இட அமைப்பு;

(b) இருக்கக்கூடிய உள்கட்டமைப்பு;

(c) நிருவாகம் மற்றும் பேணிவருதல் அடிப்படையில் ஏற்படக்கூடிய செலவினம்;

(d) தனியார் பள்ளி வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்குத் தேவைப்படும் நியாயமான மிகையளவு;

(e) குறிப்பிடப்படுகிற பிற கூறுகள் எவையும்.

**(2)** குழு, தனியார் பள்ளியால் விதிக்கப்படத்தக்க கட்டணத்தை நிருணயித்ததின் பேரில் தொடர்புடைய பள்ளிக்கு தன் முடிவைத் தெரிவித்தல் வேண்டும்.

(3) குழுவின் முடிவினால் குறையுற்ற தனியார் பள்ளி எதுவும், அந்தக் குழுவின் முடிவைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் குழுவின் முன்பு தன் மறுப்புரையைத் தாக்கல் செய்தல் வேண்டும்.

(4) குழு, தனியார் பள்ளியின் மறுப்புரையைப் பரிசீலனை செய்து, அத்தகைய மறுப்புரையைப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும்.

(5) குழுவினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையானது, அறுதியானதாகவும், மூன்று கல்வியாண்டுகளுக்குத் தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதாகவும் அமையும். மேற்சொன்ன கால அளவின் இறுதியில், திருத்தம் செய்வதற்காக விண்ணப்பம் செய்ய தனியார் பள்ளிக்கு உரிமை உண்டு.

(6) குழு, எந்த வெவ்வேறுபட்ட தலைப்புகளின் கீழ் கட்டணம் வசூலிக்கப்படுதல் வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

குழுவின் அதிகாரங்களும் அலுவற் பணிகளும்.

7. (1) குழுவின் அதிகாரங்களும், அலுவற் பணிகளும் பின்வருபவையாக இருக்கும்,

(a) தனியார் பள்ளிகளால், வசூலிக்கப்பட வேண்டிய கட்டணத்தை தீர்மானித்தல்;

(b) குழுவினால் தீர்மானிக்கப்படும் அல்லது நேர்விற்கேற்ப அரசினால் நிருணயிக்கப்படும் கட்டணத்திற்கு மிகையாகக் கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்து முறையீடுகளை விசாரித்தல். குழுவானது, தொடர்புடைய தனியார் பள்ளியில் அல்லது உதவி பெறும் பள்ளியின் மேலாண்மையிடமிருந்து அல்லது அரசுப் பள்ளியிடமிருந்து சான்றினையும், விளக்கத்தினையும் பெற்ற பின்பு, குழுவினால் தீர்மானிக்கப்படும் அல்லது நேர்விற்கேற்ப அரசால் நிருணயிக்கப்படும் கட்டணத்திற்கு மிகையான கட்டணத்தைத் தனியார் பள்ளி அல்லது அரசுப்பள்ளி அல்லது உதவி பெறும் பள்ளி வசூலித்திருக்கிறது என்ற முடிவுக்கு வருமாயின், அது, தனியார் பள்ளி அல்லது உதவிபெறும் பள்ளியின் ஏற்பிசைவை அல்லது நேர்வுக்கேற்ப ஒப்பேற்பினை அறவு செய்வதற்காக அல்லது தனியார் பள்ளியை அல்லது அரசுப்பள்ளியை அல்லது உதவிபெறும் பள்ளியை பொறுத்துத்தான் பொருத்தமெனக் கருதும் பிற நடவடிக்கை எதனையும் எடுப்பதற்காக உரிய அதிகார அமைப்புக்குப் பரிந்துரைத்தல் வேண்டும்.

(2) குழு பின்வரும் அதிகாரம் உடையதாக இருக்கும்,

(i) ஒவ்வொரு தனியார் பள்ளியையும், குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடிய தேதிக்குள் அதன் கூர்ந்தாய்வுக்காக தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடனும், கணக்குப் புத்தகங்களுடனும், வசூலிக்கத் கருதியிருக்கிற கட்டண அமைப்பைக் குழுவின் முன்பு வைக்குமாறு கோருதல்;

(ii) தனியார் பள்ளி வசூலிக்கக் கருதியிருக்கிற கட்டணம் நியாமானதாகவோ மற்றும் ஆதாயமானதாகவோ மிகை அளவிலான கட்டணம் வசூலிப்பதாகவோ இல்லை என்பதை சரி பார்த்து உறுதி செய்து கொள்ளுதல்.

(iii) அந்த கட்டண அமைப்பிற்கு ஒப்பேற்பு அளித்தல் அல்லது தனியார் பள்ளியால் வசூலிக்கப்படக்கூடிய பிற கட்டணத்தைத் தீர்மானித்தல்;

(3) குழுவானது, பின்வரும் அதிகாரம் உடையதாக இருக்கும்,

(i) இடைநிலைக் கல்விக்கான மையக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ள பள்ளியால் வசூலிக்கப்படும் கட்டணம் பள்ளியால் அளிக்கப்படும் வசதிகளுக்குத் தகுந்ததாக இருக்கிறதா என்பதனைச் சரி பார்த்து உறுதி செய்து கொள்ளுதல்;

(ii) இடைநிலைக் கல்விக்கான மையக்குழுவுடன் இணைக்கப்பட்டுள்ள பள்ளியால் மிகைக் கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்த முறையீடுகளை விசாரித்தல்.

(iii) அந்தப் பள்ளி மிகைக்கட்டணம் வசூலித்திருக்கிறது என்ற முடிவுக்கு அது வருமாயின், இடைநிலைக்கல்வி மையக் குழுவிற்கு அந்த பள்ளியின் இணைப்பினை நீக்குமாறு பரிந்துரை செய்தல்.

(4) குழுவானது, தன் அலுவற்பணிகளை ஆற்றுவதில் எழலாகிற அனைத்துப் பெருட்பாடுகளிலும் தனது சொந்த நடைமுறையை முறைப்படுத்துவற்கு அதிகாரம் உடையது ஆகும். மற்றும் பின்வரும் பொருட்பாடுகளைப் பொருத்து இந்தச் சட்டத்தின்படி விசாரணை எதனையும் செய்யும் நோக்கத்திற்காக, உரிமை வழக்கொன்றை விசாரணை செய்கையில், 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி ஓர் உரிமையியல் நீதி மன்றத்திற்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டதாக இருக்கும், அவையாவன:—

மையச் சட்டம் V/1908.

(i) சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பி அவரது வருகைப் பதிவை நடைமுறைப்படுத்துதல் மற்றும் உறுதிமொழியின் பேரில் அவரை விசாரணை செய்தல்;

(ii) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிடுமாறு கோருதல்;

(iii) ஆணையுறுதி ஆவணங்களின்பேரில் சாட்சியத்தைப் பெறுதல்;

(iv) சாட்சியை விசாரணை செய்வதற்காக ஆணையம் எதனையும் பிறப்பித்தல்.

**கணக்குகளை ஒழுங்குமுறைப் படுத்துதல்.**

8. அரசானது, வகுத்துரைக்கப்படும் முறையில் தனியார் பள்ளிகளால் கணக்குகள் வைத்து வரப்படுவதை ஒழுங்கு முறைப்படுத்தலாம்.

**தண்டனைகள்.**

9. (1) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளை மீறுகிற எவரொருவரும், குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் ஏழாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்கு சிறைத் தண்டனையும் ஐந்தாயிரம் ரூபாய் நீடிக்கலாகும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

***வரம்புரை:—*** ஆனால் நீதிமன்றமானது தீர்ப்பில் குறிப்பிடப்பட வேண்டிய போதியதும் மற்றும் தனிப்பட்டதானதுமான காரணம் எதற்காகவும், மூன்றாண்டுகளுக்கு குறைவானதொரு கால அளவுக்குச் சிறை தண்டனையும் விதிக்கலாம்.

(2) இந்தப் பிரிவின்படி குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர் இந்தச் சட்டத்தை மீறிய வகையில் எந்த மாணவரிடமிருந்து மிகைக் கட்டணம் வசூலிக்கப்பட்டதோ அந்த மாணவருக்கு அந்த மிகைக் கட்டணத்தை திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

**நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.**

10. (1) இந்த சட்டத்தின் வகைமுறைகளில் எதற்கும் எதிரான குற்றச் செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் செய்யப்படுகிறவிடத்து அந்தக் குற்றச் செயல் செய்யப்பட்ட நேரத்தில் அந்த நிறுமத்தின் அலுவலை நடத்தி வருவதற்குப் பொறுப்பாயிருந்தவரும் பொறுப்பிலிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அதோடு அந்த நிறுமமும் அந்தக் குற்றச் செயலை செய்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கிணங்கிய வரையில் தண்டிக்கபடுவதற்கு உள்ளதாலும் வேண்டும்.

***வரம்புரை :—*** ஆனால், நபர் எவரும், அத்தகைய குற்றச்செயல் தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதென்று அல்லது அந்த குற்றச் செயல் செய்யப்பட்டதை தடுப்பதற்கு தாம் உரிய முயற்சி அனைத்தையும் எடுத்தார் என்று மெய்ப்பிப்பாராயின், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் தண்டனை எதற்கும் அவரை உள்ளாக்காது.

(2). (1)—ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டு அந்த நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடனோ அல்லது மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டு இருக்கிறது அல்லது அவர் பாலுள்ள கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாயிருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுமிடத்து, அந்த இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றச் செயலை செய்ததாகக் கொள்ளப்படுதலும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கிணங்க தண்டிக்கப்படுவதற்கு உள்ளதாலும் வேண்டும்.

***விளக்கம்:*** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

(a) ‘‘நிறுமம்’’ என்பது கூட்டுக்குழுமம் எதுவும் என்று பொருள்படும். மற்றும் ஒரு பொறுப்புக் கட்டளை, நிறுவகம், ஒரு குழுமம் அல்லது தனியாட்களின் பிற கழகம் எதனையும் உள்ளடக்கும்.

(b) ‘‘இயக்குநர்’’ என்றால்

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக, அந்த நிறுவகத்தின் கூட்டாளி என்று பொருள்படும்;

(ii) ஒரு குழுமம், பொறுப்புக்கட்டளை அல்லது தனியாட்களின் பிற கழகம் தொடர்பாக, குழுமம், பொறுப்புக் கட்டளை அல்லது பிற சங்கத்தின் விதிகளின்படி, அந்தக் குழுமம், பொறுப்புக் கட்டளை அல்லது நேர்விற்கேற்ப பிற சங்கத்தின் அலுவலர்பாடுகளின் மேலாண்மைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிற நபர் என்று பொருள்படும்.

மாவட்ட குழுக்கள்.

**11. (1)** ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும், ஒரு மாவட்டக்குழு இருத்தல் வேண்டும். அது தலைமைக் கல்வி அதிகாரியைத் தலைமையாளராகவும் வகுத்துரைக்கப்படும் பிற உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) மாவட்டக்குழு அல்லது இதன் பொருட்டு அதனால் அதிகாரம் அளிக்கப்பட்ட மேற்சொன்ன குழுவின் உறுப்பினர் எவரும் தனியார் பள்ளி எதனின் வழக்கமான வேலை நேரங்களின்போது, எந்த நேரத்திலும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகள் மீறப்படுகிறது அல்லது மீறப்பட்டுள்ளது என அது அல்லது அவர் நம்பக் காரணம் பெற்றிருந்தால், அத்தகைய தனியார் பள்ளியில் அல்லது அதன் வளாகம் எதிலும் அல்லது அந்தத் தனியார் பள்ளி நிருவாகத்திற்குச் சொந்தமான வளாகம் எதிலும் நுழைந்து அந்த தனியார் பள்ளிக்கு அல்லது அதன் மேலாண்மைக்குச் சொந்தமான பதிவுறு கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதையும், அத்தகைய பதிவுறு, கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதுவும் அந்தத் தனியார் பள்ளியுடன் எந்த அளவிற்குத் தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த அளவுக்குச் சோதனையிட்டு ஆய்வு செய்யலாம். மற்றும் அத்தகைய மீறுகை எதுவும் நிகழ்கிறதா அல்லது நிகழ்ந்திருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, அத்தகைய பதிவுறு, கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதனையும் கைப்பற்றலாம்.

(3) சோதனையிடுதல் மற்றும் கைப்பற்றுகை தொடர்பான 1973ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் வகை முறைகள், இயன்ற அளவுக்கு (2)—ஆம் உட்பிரிவின்படியான சோதனையிடுதல் மற்றும் கைப்பற்றுகைக்குப் பொருந்தும். மையச் சட்டம் 2/1974.

குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

**12.** நீதிமன்றம் எதுவும் அரசின் அல்லது இதன் பொருட்டு அரசு அதிகாரமளிக்கும் அலுவலரின் ஒப்பளிப்பு இன்றி, இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

பிறசட்டங்கள் செயல்பாடுகள்.

**13.** இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு தவிர, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அவற்றுக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருத்தல் கூடாது.

நல்லெண்ணத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு.

**14.** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின்படி நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், குழுவுக்கு அல்லது அதன் உறுப்பினர்களுக்கு எதிராகவோ, அரசுக்கு அல்லது இந்தச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ அதிகாரங்களைச் செலுத்துவதற்கு அல்லது அலுவற் பணிகளைப் புரிவதற்கு அதிகாரம் அளிக்கப்படும் அலுவலர் எவருக்கும், அதிகார அமைப்பு எதற்கும் அல்லது நபர் எவருக்கும் எதிராகவோ உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும், எடுக்கப்படுதல் ஆகாது.

இடர்பாடுகளை அகற்றுவதற்கு அதிகாரம்.

**15.** இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பிறகு குழுவை முதலில் அமைப்பதில் அல்லது பிறவாறு இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்குச் செயல்விளைவு அளிப்பதில், இடர்பாடு எதுவும் எழுமானால், அரசு, அறிவிக்கை வாயிலாக, அந்த இடர்பாட்டை அகற்றுவதற்குத் தனக்குத் தேவையானதாக அல்லது உகந்ததாகத் தோன்றலாகிறதும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாததுமான அத்தகைய வகை முறைகளைச் செய்யலாம்.

***வரம்புரை:***—ஆனால் அத்தகைய அறிவிக்கை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் கழிந்தபின்பு, பிறப்பிக்கப்படுதலாகாது.

விதிகளை செய்வதற்கான அதிகாரம்.

**16. (1)** அரசு இந்த சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்டபின்பு சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடர் அல்லது அடுத்தக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய விதி அல்லது அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின், அல்லது அத்தகைய விதி செய்யப்படுதல் ஆகாது அல்லது அறிவிக்கை பிறப்பிக்கப்படுதல் ஆகாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின் அந்த விதி அல்லது அறிவிக்கை, அதன் பின்பு அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்குக் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**தங்கம் தென்னரசு,**
*பள்ளிக் கல்வி அமைச்சர்.*

**நோக்கக் காரண விளக்கவுரை**

தனியார் பள்ளிகள், அப்பள்ளிகளில் அளிக்கப்படும் உள்கட்டமைப்பு வசதிகளுக்குச் சிறிதும் பொருந்தாத அளவில், சிறப்புக் கட்டணங்கள், கற்பிப்புக் கட்டணங்கள், காலமுறைக் கட்டணங்கள் போன்றவற்றின் பொருட்டு மாணாக்கரிடமிருந்து மிக அதிக அளவிலான கட்டணங்களை வசூலித்து வருவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், பல்வேறுபட்ட தலைப்புகளில் கட்டண வீதங்களை நிர்ணயிப்பதில் தனியார் பள்ளிகளால் ஒரு சீர்மையான நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. எனவே, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தனியார் பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வகை செய்வதற்காகவும், அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்காகவும் விரிவானதொரு சட்டத்தைக் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**தங்கம் தென்னரசு,**
*பள்ளிக் கல்வி அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைப்பு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 1(3), 6(1) (e), 8, 11 (1), 12, 15, 16 ஆகிய கூறுகள், அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அறிவிக்கைகளைப் பிறப்பிக்கவோ அல்லது நேர்விற்கேற்ப விதிகளைச் செய்யவோ அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள், இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**தங்கம் தென்னரசு,**
*பள்ளிக் கல்வி அமைச்சர்.*

## நிதி பற்றிய குறிப்பு

இந்த சட்ட முன்வடிவின் 5–ஆம் கூறு, "பள்ளிகளால் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணத்தை தீர்மானிப்பதற்கான குழுவின்" உறுப்பினர்கள், கூட்டங்களுக்கு வருகை தருவதற்கு வழங்கப்படும் கட்டணங்களுக்கும், படித் தொகைகளுக்கும் வகை செய்கிறது.

**2.** எனவே, இச்சட்டமியற்றுதலானது மாநிலத் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்வதை உள்ளடக்கியிருக்கிறது. எனினும் இந்தச் சட்ட முன்வடிவின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் உள்ளாகும் செலவினத்தை எந்தகோணத்திலும் துல்லியமாக இந்த நிலையில் மதிப்பிடுவது இயலாது.

**தங்கம் தென்னரசு,**
*பள்ளிக் கல்வி அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2009**

***2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

**1. (1)** இந்தச் சட்டம், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 32/2006.**

**ஐந்தாம் இணைப்பு பட்டியலுக்கான திருத்தம்.**

**2.** 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் ஐந்தாம் இணைப்பு பட்டியலில் வரிசை எண் 12 மற்றும் அதனைச் சார்ந்த பதிவிற்குப் பின்னர், பின்வரும் வரிசை எண் மற்றும் அதன் பதிவு முறையே சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :—

"**13.** அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையர் பணியகம்.".

**நோக்கக் காரண விளக்கவுரை**

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையர் பணியகத்திலிருந்து வரப்பெற்ற முறையீட்டின் பேரில், மேற்சொன்ன நிறுவனமானது பொருள்களை பூஜ்ய வீதத்தில் கொள்முதல் செய்வதற்கு இயலும் நோக்கத்திற்காக, 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) ஐந்தாம் இணைப்பு பட்டியலில் மேற்சொன்ன நிறுவனத்தை உள்ளடக்கும் வகையில், மேற்சொன்ன இணைப்புப் பட்டியலைத் திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

**2.** மேற்சொன்ன கருத்துருவிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, மேற்சொன்ன சட்டத்திற்கான ஐந்தாம் இணைப்புப் பட்டியலைத் திருத்துவதற்காக மேற்சொன்ன சட்டத்தின் 86–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிக்கை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. மேற்சொன்ன 86–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின் படி மேற்சொன்ன அறிவிக்கைக்குப் பதிலாக அமையும் வகையில் சட்டமுன்வடிவு ஒன்று சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

**3.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.நா.மீ. உபயதுல்லா,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2009**

***2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை** மேலும் **திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2008ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. 2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின் (2)ஆம் பிரிவில் , 2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1)ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(1) ''கூடுதல் ஆணையர்'' என்றால், 48ஆம் பிரிவின்கீழ் வணிகவரி கூடுதல் ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(1–A) ''நிருவாக துணை ஆணையர்'' என்றால், 48ஆம் பிரிவின் கீழ் வணிகவரி நிருவாகத் துணை ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(2) (2)ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(2) ''மேல்முறையீட்டுத் துணை ஆணையர்'' என்றால், 48ஆம் பிரிவின் கீழ் வணிகவரி மேல்முறையீட்டுத் துணை ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(3) (3)ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(3) ''மேல்முறையீட்டு இணை ஆணையர்'' என்றால், 48ஆம் பிரிவின் கீழ் வணிகவரி மேல்முறையீட்டு இணை ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(4) (5)ஆம் கூறுக்குப் பின்னர் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(5–A) ''உதவி ஆணையர்'' என்றால் 48ஆம் பிரிவின்கீழ் வணிகவரி உதவி ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(5) (7)ஆம் கூறானது நீக்கப்படுதல் வேண்டும்;

(6) (8)ஆம் கூறானது நீக்கப்படுதல் வேண்டும்;

(7) (13)ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(13) ''வணிகவரி அலுவலர்'' என்றால் வணிகவரி அலுவலர் என்ற பெயரால் குறிக்கப்பட்டோ அல்லது அவரது பதவியின் காரணமாகவோ, வணிகவரி அலுவலருக்குரிய அதிகாரத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, ஆணையரால் நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(8) (17)ஆம் கூறானது நீக்கப்படுதல் வேண்டும்;

(9) (18)ஆம் கூறுக்கு பின்னர், பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(18–A) "துணை ஆணையர் (வரிக்கணிப்பு)" என்றால் 48ஆம் பிரிவின்கீழ் வணிகவரித் துணை ஆணையர் (வரிக்கணிப்பு) ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(10) (25)ஆம் கூறுக்குப் பின்னர், பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(25–A) வணிகவரி "இணை ஆணையர் (செயலாக்கம்)" என்றால் 48ஆம் பிரிவின் கீழ் வணிகவரி இணை ஆணையர் (செயலாக்கம்) ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(11) (39)ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(39) "மண்டல துணை ஆணையர்" (Territorial Deputy Commissioner) என்றால், 48ஆம் பிரிவின்கீழ் வணிகவரி மண்டல துணை ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

32–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 32ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "மண்டல உதவி ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "மண்டல துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும்.

48–ஆம் பிரிவிற்கான திருத்தம்,

4. முதன்மைச் சட்டத்தின் 48ஆம் பிரிவில்

(i) ஓரத்தலைப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரத்தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"வணிக வரி ஆணையர், கூடுதல் வணிக வரி ஆணையர்கள், வணிகவரி மேல்முறையீட்டு இணை ஆணையர்கள், வணிகவரி இணை ஆணையர்கள், வணிக வரி மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள், வணிக வரி துணை ஆணையர்கள், வணிக வரி உதவி ஆணையர்கள் ஆகியோரின் அமர்த்துகை.";

(ii) 48ஆம் பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும்.

அரசு, ஒரு வணிகவரி ஆணையரையும் மற்றும் தேவையெனக் கருதும் பல கூடுதல் வணிகவரி ஆணையர்களையும், வணிகவரி மேல்முறையீட்டு இணை ஆணையர்களையும், வணிகவரி இணை ஆணையர்களையும், வணிகவரி (செயலாக்கம்) இணை ஆணையர்களையும், வணிகவரி மேல்முறையீட்டுத் துணை ஆணையர்களையும், வணிகவரி மண்டல துணை ஆணையர்களையும், வணிகவரி நிருவாக துணை ஆணையர்களையும், வணிகவரி (வரிக்கணிப்பு) துணை ஆணையர்களையும், வணிகவரி (செயலாக்கம்) துணை ஆணையர்களையும் மற்றும் உதவி ஆணையர்களையும் தாம் தக்கதெனக் கருதுகிறவாறு இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்படி முறையே அவர்களுக்கென அளிக்கப்பட்ட பணிகளைச் செய்யும் நோக்கத்திற்காக அமர்த்தலாம். வணிகவரி ஆணையர் தமக்கென அளிக்கப்பட்ட பணிகளை மாநிலம் முழுவதிலும் மேற்கொள்ளுதல் வேண்டும்; மற்றும் பிற அலுவலர்கள், தங்களுடைய பணிகளை, அரசு அல்லது இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் தங்களுக்கென ஒதுக்கும் அத்தகைய உள்ளூர் எல்லைகளில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 49ஆம் பிரிவில்,

(i) ஓரத்தலைப்பில் "உதவி ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) "மண்டல உதவி ஆணையர் அல்லது உதவி ஆணையர் (வரிக்கணிப்பு)" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "மண்டல துணை ஆணையர் அல்லது துணை ஆணையர் (வரிக்கணிப்பு)" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(iii) ''மண்டல உதவி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் (வரிக்கணிப்பு)'' என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் ''மண்டல துணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் (வரிக்கணிப்பு)'' என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(iv) ''துணை ஆணையர்'' என்னும் சொற்றொடர் வருகின்ற இரண்டு இடங்களில் ''இணை ஆணையர்'' என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டத்தின் 51ஆம் பிரிவில், 51–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக ''மேல்முறையீட்டு உதவி ஆணையர்'' என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் ''மேல்முறையீட்டுத் துணை ஆணையர்'' என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (1)–ஆம் உட்பிரிவில், "உதவி ஆணையர் (வரிக்கணிப்பு)" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "துணை ஆணையர் (வரிக்கணிப்பு)" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

7. முதன்மைச் சட்டத்தின் 52ஆம் பிரிவில், **52–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் "மேல்முறையீட்டு இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) "உதவி ஆணையர் (வரிக்கணிப்பு)" என்னும் சொற்றொடர் வருகின்ற மூன்று இடங்களில் "துணை ஆணையர் (வரிக்கணிப்பு)" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

8. முதன்மைச் சட்டத்தின் 53ஆம் பிரிவில், 53–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "துணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களில் எல்லாம் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (2)ஆம் உட்பிரிவில், "மேல்முறையீட்டு உதவி ஆணையர் அல்லது மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது மேல்முறையீட்டு இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

9. முதன்மைச் சட்டத்தின் 54ஆம் பிரிவில், ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "துணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களில் எல்லாம் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 54–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 55ஆம் பிரிவில், 55–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "இணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களில் எல்லாம் "கூடுதல் ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) "துணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இரண்டு இடங்களில் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

11. முதன்மைச் சட்டத்தின் 56ஆம் பிரிவில், 56–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) (1)ஆம் உட்பிரிவில் "ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையரிடமிருந்து மற்றொரு மேல்முறையீட்டுத் துணை ஆணையருக்கு அல்லது ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையரின் முன்பாக நிலுவையில் உள்ள ஒரு மேல்முறையீடு மற்றொரு மேல்முறையீட்டு உதவி ஆணையர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு மேல்முறையீட்டு இணை ஆணையரிடமிருந்து மற்றொரு மேல்முறையீட்டு இணை ஆணையருக்கு அல்லது ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையரின் முன்பாக நிலுவையில் உள்ள ஒரு மேல்முறையீடு மற்றொரு மேல்முறையீட்டுத் துணை ஆணையர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (2)ஆம் உட்பிரிவில் "மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "மேல்முறையீட்டு இணை ஆணையர் அல்லது ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

57–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

12. முதன்மைச் சட்டத்தின் 57ஆம் பிரிவில்,

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இடங்களில் எல்லாம் "கூடுதல் ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (1)ஆம் உட்பிரிவில், "துணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

58–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

13. முதன்மைச் சட்டத்தின் 58–ம் பிரிவில்,

(i) "மேல்முறையீட்டு உதவி ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இடங்களில் எல்லாம் "மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) "மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இடங்களில் எல்லாம் "மேல்முறையீட்டு இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(iii) "துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இடங்களில் எல்லாம் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

59–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. முதன்மைச் சட்டத்தின் 59ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில், "இணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "கூடுதல் ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

60–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 60ஆம் பிரிவில் "துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற மூன்று இடங்களில் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

63–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

16. முதன்மைச் சட்டத்தின் 63ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், "மேல்முறையீட்டு உதவி ஆணையர் அல்லது மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது மேல்முறையீட்டு இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

67–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

17. முதன்மைச் சட்டத்தின் 67ஆம் பிரிவில், (10)ஆம் உட்பிரிவின் வரம்புரையில், "துணை வணிகவரி அலுவலர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இரண்டு இடங்களில் அதற்குப் பதிலாக "வணிகவரி அலுவலர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

73–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

18. முதன்மைச் சட்டத்தின் 73ஆம் பிரிவில் "துணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

85–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

19. முதன்மைச் சட்டத்தின் 85ஆம் பிரிவின், (2)ஆம் உட்பிரிவில், (g)–எனும் கூறில்,

(i) "உதவி ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற மூன்று இடங்களில் "துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) "அல்லது ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர் அல்லது ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது ஒரு துணை ஆணையர் அல்லது ஒரு இணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "அல்லது ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது ஒரு மேல்முறையீட்டு இணை ஆணையர் அல்லது ஒரு இணை ஆணையர் அல்லது ஒரு கூடுதல் ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

செய்யத்தக்க தாக்குதல்.

**20.** முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்றோ அல்லது அதன் பின்னரோ, முதன்மைச் சட்டத்தின் படி, அதிகாரமைப்பு எதனின் முன்பாகவும் செய்யப்பட்ட விண்ணப்பம் எதுவுமோ அல்லது நிலுவையிலுள்ள நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வு எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி அந்த அதிகாரமைப்பின் முன்பாக செய்யப்பட்டிருப்பதாகவும் நிலுவையில் இருப்பதாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டம் வெளியிடப்படும் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் வகைமுறையின்படி பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## நோக்கக் காரண விளக்கவுரை

வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் 30–7–2008 எனும் தேதியிட்ட நிலை அரசாணை எண் 71 இல் இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், வணிகவரி அலுவலர் மற்றும் துணை வணிகவரி அலுவலர்கள் ஆகியோருடைய பதவியிடங்கள், முறையே கூடுதல் ஆணையர், இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், வணிகவரி அலுவலர் பதவியிடங்களாக பதவிப்பெயரை மாற்றியமைத்துக் குறிக்கிற வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதிகாரிகளின் மேற்சொன்னவாறு மாற்றியமைக்கப்பட்ட பதவிப் பெயர்களைக் கருத்திற் கொண்டு, 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 32/2006) அந்த அதிகாரிகள் குறித்த சுட்டுகைகளில் மாற்றியமைக்கப்பட்ட பதவிப் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும். அதற்கிணங்க, அந்த நோக்கத்திற்காக, மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதாக அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

**சி.நா.மீ. உபயதுல்லா,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2009**

***2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நான்காம் இணைப்பு பட்டியலுக்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

2. 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் நான்காம் இணைப்பு பட்டியலில், பகுதி–B இல், 41–ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்னர், பின்வரும் இனங்களும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"41-A. கையினால் தயாரிக்கப்படும் இரும்புப் பெட்டிகள்.

41-B. கையினால் தயாரிக்கப்படும் தகர அடைப்பான்கள்.''.

**நோக்கக் காரண விளக்கவுரை**

2009–2010ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை உரையில், கையினால் தயாரிக்கப்படும் இரும்பு பெட்டிகளுக்கும் கையினால் தயாரிக்கப்படும் தகர அடைப்பான்களுக்கும் வரிவிதிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன அறிவிப்பிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக, 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) நான்காம் இணைப்புப் பட்டியலைத் திருத்துவதற்காக மேற்சொன்ன சட்டத்தின் 86ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிக்கை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. மேற்சொன்ன சட்டத்தின் 86ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்படி மேற்சொன்ன அறிவிக்கைக்குப் பதிலாக அமையும் வகையில் சட்டமுன்வடிவு ஒன்று சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

**சி.நா.மீ. உபயதுல்லா,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.